
# இந்திய வரலாற்றின் கருப்புப் பக்கம் அவசரநிலை

பிரதமர் நரேந்திர மோடி



புது தில்லி, ஜூன் 18: காங்கிரஸ் ஆட்சிக் காலத்தில் அமல்படுத்தப்பட்ட அவசரநிலை காலகட்டமே இந்திய வரலாற்றின் கருப்புப் பக்கமாக அமைந்ததாக 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்தார்.

மேலும், ஜனநாயகத்தை ஆதரித்தவர்கள் அவசரநிலை காலகட்டத்தின்போது துன்புறுத்தப்பட்டதாகவும் அவர் கூறினார்.

மாதந்தோறும் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் 'மனதின் குரல்' வானொலி நிகழ்ச்சி வாயிலாக பிரதமர் மோடி நாட்டு மக்களிடம் உரையாற்றி வருகிறார்.

நடப்பு ஜூன் மாதத்தின் கடைசி ஞாயிற்றுக்கிழமையில் பிரதமர் மோடி அமெரிக்காவுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்ள உள்ளார். அதன் காரணமாக, ஒரு வாரம் முன்னதாகவே மனதின் குரல் நிகழ்ச்சியில் ஞாயிற்றுக்கிழமை பிரதமர் மோடி உரையாற்றினார். அப்போது அவர் கூறியதாவது:

ஜனநாயகத்தின் தாய் இந்தியா. நாட்டில் அரசமைப்புச் சட்டத்துக்கே அதீத முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருகிறது. அப்படியிருக்கையில் 1975-ஆம் ஆண்டு ஜூன் 25-ஆம் தேதியை ஒருபோதும் மறக்க முடியாது. அந்த நாளில் தான் நாட்டில் அவசரநிலை அமல்படுத்தப்பட்டது. இந்திய வரலாற்றின் கருப்புப் பக்கமாக அது அமைந்தது. லட்சக்கணக்கானோர் அவசரநிலையை முழு மனதுடன் எதிர்த்தனர்.

அந்தக் காலகட்டத்தில் ஜனநாயகத்தை ஆதரித்தவர்கள் துன்புறுத்தப்பட்டனர். அவை தொடர்பாக பல புத்தகங்கள் எழுதப்பட்டுவிட்டன. அவை அவசரநிலையின்போது மக்கள் துன்புறுத்தப்பட்டதை விரிவாக எடுத்துரைக்கின்றன. சுதந்திரத்தின் 75-ஆவது ஆண்டை நாம் அண்மையில் கொண்டாடிய சூழலில், அவசரநிலை போன்ற கொடுமைகளையும் மக்கள் நினைவுகூர வேண்டியது அவசியம்.

இதன்மூலம் தற்போதைய தலைமுறையினர் ஜனநாயகத்தின் முக்கியத்துவம் குறித்து தெரிந்து கொள்வர்.

**சத்ரபதி சிவாஜியின் சாதனை:** சத்ரபதி சிவாஜி முடிசூட்டிக் கொண்டு இந்த மாதத்துடன் 350 ஆண்டுகள் நிறைவடைந்துள்ளன. அதைக் கொண்டாடும் வகையில் மகாராஷ்டிரத்தின் ராய்கட் கோட்டையில் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அவரது நிர்வாகம் மிகவும் சிறப்புமிக்கது. நீர் மேலாண்மை, கடற்படையை வலுப்படுத்தியதில் சத்ரபதி சிவாஜியின் பங்கு மகத்தானது. அவரின் சாதனைகள் இந்திய வரலாற்றில் இன்றும் ஒளிர்ந்து வருகின்றன.

**காசநோய் இல்லா இந்தியா:** காசநோயை ஒழிப்பதில் இந்தியா பெரும் சவாலை எதிர்கொண்டு வருகிறது. 2025-ஆம் ஆண்டுக்குள் காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

காசநோயாளிகளைத் தத்தெடுக்கும் 'நிக்ஷய் மித்ரா' திட்டத்தை மத்திய அரசு செயல்படுத்தி வருகிறது. அந்தத் திட்டத்தின் மூலமாக நாடு முழுவதும் 10 லட்சத்துக்கும் அதிகமான காசநோயாளிகள் தத்தெடுக்கப்பட்டுள்ளனர். சுமார் 85,000 பேர் அவர்களைத் தத்தெடுத்துள்ளனர். அவர்களது பணிகள் பாராட்டுக்குரியவை.

புத்தாக்கத்தை வரவேற்கும் நாடு இந்தியா. ஜப்பானின் மியாவகி தொழில்நுட்பத்தின் மூலமாக மண் வளமற்று காணப்படும் இடங்களிலும் காடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. அந்த நுட்பத்தைப் பயன்படுத்தி வெகு விரைவில் காடுகளை உருவாக்குவதுடன் உயிர்ப் பல்லுயிர்த்தன்மையையும் பாதுகாக்க முடியும்.

அந்தக் காடுகள் பலவகை உயிரினங்களுக்கும் வாழ்விடங்களாக அமைகின்றன. அந்த நுட்பத்தின் மூலமாக நாட்டின் பல்வேறு பகுதிகளில் காடுகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**முன்னேறும் ஆளுநர் மாளிகைகள்:** முன்பு ஆளுநர் மாளிகைகள் சமூக வளர்ச்சிப் பணிகளின் மையமாக மட்டுமே அறியப்பட்டன. ஆனால், தற்போது காசநோய் இல்லா இந்தியா இயக்கம், இயற்கை வேளாண்மை உள்ளிட்டவற்றையும் ஆளுநர் மாளிகைகள் முன்னெடுத்து வருகின்றன.

வெவ்வேறு மாநிலங்கள் தோற்றுவிக்கப்பட்ட தினத்தை அனைத்து ஆளுநர் மாளிகைகளும் தற்போது கொண்டாடி வருகின்றன. இது 'ஒரே இந்தியா-உன்னத இந்தியா' என்ற கொள்கைக்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.

**புதிய வெண்மைப் புரட்சி:** ஜம்மு-காஷ்மீர் குறித்த செய்திகள் தற்போது அடிக்கடி வெளியாகின்றன. அங்கு சுற்றுலா வாய்ப்புகள் அதிகரித்துள்ளன. ஜி20 கூட்டங்களும் அண்மையில் அங்கு நடைபெற்றன. பாரமுல்லா பகுதியில் வேளாண்மை பல ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், அங்கு பாலுக்குத் தட்டுப்பாடு காணப்பட்டது. அங்கு வாழும் மக்கள் அந்தச் சவாலை வாய்ப்பாக மாற்றிக் காட்டியுள்ளனர்.

அங்கு வாழும் பலர் கால்நடை வளர்ப்பை மேற்கொள்ளத் தொடங்கினர். அதன் காரணமாக, புதிய வெண்மைப் புரட்சியின் மையமாக பாரமுல்லா மாறி வருகிறது. கடந்த 3 ஆண்டுகளில் மட்டும் அங்கு 500-க்கும் அதிகமான பால் உற்பத்தி மையங்கள் தொடங்கப்பட்டுள்ளன என்றார் பிரதமர் மோடி.

## இயற்கைப் பேரிடரை எதிர்கொள்ளும் வலிமை

'அனைத்துச் சவால்களையும் இந்தியா திறம்பட எதிர்கொண்டு வருகிறது. அண்மையில் 'பிபர்ஜாய்' புயலானது நாட்டின் மேற்குக் கடற்கரைப் பகுதியைத் தாக்கியது. அதன் காரணமாக அதிவேகத்தில் காற்று வீசியதோடு கனமழையும் பெய்தது. கட்ச் வளைகுடா பகுதியில் புயல் பெரும் சேதங்களை ஏற்படுத்தியது. எனினும், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்பட்டிருந்ததால் புயலால் பெரிய அளவிலான பாதிப்புகள் ஏற்படவில்லை.

அதே வேளையில், புயலால் ஏற்பட்ட ஒருசில பாதிப்புகளில் இருந்து கட்ச் மக்கள் விரைந்து மீள்வர். இயற்கைச் சீற்றங்களை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது. கடந்த சில ஆண்டுகளாக பேரிடர் மேலாண்மையை இந்தியா வலுப்படுத்தியுள்ளது. அதன் காரணமாக, புயல் உள்ளிட்ட இயற்கைப் பேரிடர்களை எளிதில் எதிர்கொள்ள முடிகிறது.

இயற்கையைக் காப்பதன் மூலமாக மட்டுமே இயற்கைப் பேரிடர்களைக் கட்டுப்படுத்த முடியும். மழைநீர் சேகரிப்பு உள்ளிட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதன் மூலமாக இயற்கையைக் காக்க முடியும். மழைநீர் சேகரிப்பு தொடர்பாக பல புத்தாக்க நிறுவனங்கள் செயல்படத் தொடங்கியுள்ளன' என்றார் பிரதமர் மோடி.

## யோகாவின் முக்கியத்துவம்

'அமெரிக்காவுக்கு அரசுமுறைப் பயணம் மேற்கொள்ளும்போது ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறவுள்ள சர்வதேச யோகா தின நிகழ்ச்சியில் கலந்து கொள்ளவுள்ளேன். அன்றாட வாழ்க்கையின் ஒரு பகுதியாக யோகாவை மக்கள் கைக்கொள்ள வேண்டும். சமூக வலைதளங்களிலும் யோகா தினம் குறித்த பதிவுகள் அதிக அளவில் இடம்பெற்று வருகின்றன. அந்த தினத்துக்காக நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் மக்கள் காத்துக் கொண்டுள்ளனர்.

'ஒரே உலகம்-ஒரே குடும்பத்தின் நலனுக்கான யோகா' என்பதே நிகழாண்டு யோகா தினத்தின் மையப் பொருளாக உள்ளது. யோகப் பயிற்சிகள் மூலமாக அன்றாட வாழ்க்கையில் பெரும் மாற்றங்கள் ஏற்படும். அதை மக்கள் கண்கூடாகக் காண முடியும்' என்றார் பிரதமர் மோடி.

# மதுராந்தகம் அருகே 16-ஆம் நூற்றாண்டு நவகண்ட நடுகல்!



செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், இந்தளூர் கிராமத்தில் கண்டெடுக்கப்பட்ட 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த நவகண்ட நடுகல்.

மதுராந்தகம், ஜூன் 18: மதுராந்தகத்தை அடுத்த இந்தளூரில் 16-ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாக கருதப்படும் நவகண்ட நடுகல்லை தொல்லியல் ஆய்வாளர்களான சி.சந்திரசேகர், இரா.ரமேஷ் ஆகியோர் கண்டறிந்துள்ளனர்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், மதுராந்தகம் அருகே இந்தளூர் விநாயகர் கோயில் தெருவில், ஆணின் கால் முட்டி மட்டும் மேலே தெரியக் கூடிய நவகண்ட நடுகல் இருந்துள்ளது. அதன் மற்ற பகுதிகள் மண்ணில் புதையுண்டு காணப்பட்டிருந்தது.

இந்தத் தகவலை அறிந்து தொல்லியல் ஆய்வில் ஈடுபட்டு வரும் தருமபுரி அரசு கலைக் கல்லூரி பேராசிரியர் சி.சந்திரசேகர் மற்றும் மதுராந்தகம் இந்து மேல்நிலைப் பள்ளி பட்டதாரி ஆசிரியர் கயப்பாக்கம் இரா.ரமேஷ் ஆகியோர் அந்தப் பகுதிக்குச் சென்று ஆய்வு செய்தனர்.

இதில், நடுகல்லை அவர்கள் கண்டறிந்தனர். இதுகுறித்து மேலும், அவர்கள் கூறியது:

இந்த நடுகல்லில் உள்ள வீரன் ஒரு அரசனாக இருந்திருக்க வேண்டும். கர்நாடக மாநிலத்தில் உள்ள சைவப் பிரிவைச் சேர்ந்த காளான் சமூகத்தவர்கள் தன்னைக் கடவுளுக்காக அர்ப்பணிக்க கூடிய ஒரு நிகழ்வுதான் நவகண்டம்.

அதாவது, தன் தலையை தானே வெட்டி எடுத்து கடவுளுக்கு படைப்பது 'நவகண்டம்'.

அல்லது அரசர் போருக்குச் செல்வதற்கு முன் மன்னரின் மெய்க்காவல் படையில் இருக்கும் ஒரு வீரன், போரில் மன்னர் வெற்றி பெறுவதற்காக வேண்டிக் கொண்டும் தன் தலையைத் தானே வெட்டி எடுத்து கடவுளுக்கு படைப்பதும் 'நவகண்டம்' தான்.

இந்த நடுகல் உருவத்தின் தலையின் மேலே ஒரு கிரீடம் உள்ளது.

எனவே, நிச்சயமாக அந்தப் பகுதியைச் சேர்ந்த குறுநில மன்னராகவோ, அரசனாகவோ இருப்பதற்கு வாய்ப்புண்டு. உருவத்தின் முகம் சிதைந்துள்ளதால், தெளிவாகத் தெரியவில்லை. கத்தியானது கைப்பிடியை ஒட்டி அழகாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

சிற்பியின் வேலைப்பாடு மிகத் தெளிவாக உள்ளதை கழுத்தை வெட்டிச் சென்ற கத்தியால் கழுத்தில் வெட்டுப்பட்ட இடம் பள்ளமாக காட்டப்பட்டதன் மூலம் தெளிவாகிறது. மேலும், அரசனின் இடைப் பகுதியில் பின்புறமாக அழகிய வடிவமைப்பு உள்ள துணி காணப்படுகிறது.

இடுப்பில் ஆபரணங்களுடன் உள்ளதைக் காண முடிகிறது. இத்தகைய நிலையில், இருப்பவரை பார்க்கும்போது, ஒரு வீரனாகவோ, அரசனாகவோ இருப்பதற்கே அதிக வாய்ப்பு உள்ளது.

கைகளில் வீரக் கழல்களும், தோள்பட்டையில் மன்னர் அணியும் காப்பு போன்ற அழகிய வடிவில் செதுக்கப்பட்டுள்ளது.

கத்தியானது கழுத்து அறுபட்ட பின்பு வளைந்து கை வரை தொங்குவது போல காட்டப்பட்டுள்ளது. எவ்வளவு வேகமாக, வலிமையாக தன் கழுத்தை வீரன் வெட்டியிருப்பான் என்பதை எண்ணிப் பார்க்க முடிகிறது என ஆய்வாளர்கள் தெரிவித்தனர்.

# போதைப் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டி



**சென்னை கோயம்பேட்டில் தொடங்கி வானகரம் வரை நடைபெற்ற போதைப் பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு மினி மாரத்தான் ஓட்ட நிகழ்ச்சியில் வெற்றி பெற்றவர்களுக்கு ஞாயிற்றுக்கிழமை பரிசுகளை வழங்கிய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன்.**

**சென்னை, ஜூன் 18:** சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, கோயம்பேட்டில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற மினி மாரத்தான் போட்டியை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தொடங்கி வைத்தார்.

சென்னை பெருநகர காவல் ஆணையரகம் சார்பில் கோயம்பேடு முதல் வானகரம் வரை பிரதான சாலை வழியாக இந்த விழிப்புணர்வு மினி மாரத்தான் போட்டி நடைபெற்றது. தொடர்ந்து, போதைப்பொருள் ஒழிப்பு குறித்த விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்கப்பட்டது.

பின்னர், சிலம்பாட்டம், பரத நாட்டியம், நடனம் போன்ற கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன.

நிகழ்ச்சியில், சட்டப்பேரவை உறுப்பினர்கள் கே.கணபதி(மதுரவாயல்) ஏ.எம்.வி.பிரபாகர ராஜா, (விருகம்பாக்கம்), திரைப்பட இயக்குநர் வெற்றிமாறன், சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையாளர் ஜே.லோகநாதன், இணை ஆணையாளர்கள், எம்.மனோகர் (மேற்கு மண்டலம்), ஆர்.வி.ரம்ய பாரதி(வடக்கு மண்டலம்),கோயம்பேடு துணை ஆணையாளர் பி.குமார் உள்ளிட்ட காவல் துறை அதிகாரிகள், திரைப்பட நடிகர்கள், நடிகைகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# பொக்கிஷங்களை அறிவோம்

**இரா. கதிரவன்**

இரண்டு செங்குத்தான பெரும் கற்களுக்கு மேல் இன்னொரு கல்லினை வைத்து - சுமை தாங்கி போன்ற அமைப்பில் இருக்கும் இவை ஒரே இடத்தில், வட்ட வடிவில் அமைக்கப்பட்டிருக்கும். அவற்றின் அமைப்பு, குறியீடு, அவை நடப்பட்ட காலம், நடப்பட்ட விதம் எல்லாம் இன்னும் புதிராக உள்ளன. ஸ்டோன் ஹென்ஞ் என்ற பெயர் கொண்ட இவை, லண்டன் நகரத்திலிருந்து சுமார் இருநூறு மைல் தொலைவில்.

இருப்பினும், அதன் தொன்மை கருதி 'யுனெஸ்கோ', அதைப் பாதுகாக்கப்பட வேண்டிய இடம் என அங்கீகரித்திருக்கிறது. ஒரு சிறப்பம்சம், அவ்விடத்தை மிக நேர்த்தியாகவும், தூய்மையாகவும் பராமரித்து வருகின்றனர். பயணியர் வாகனங்கள் சுமார் முன்னூறு மீட்டர் தொலைவில் நிறுத்தப்படுகின்றன; தேவையற்ற சிறு கடைகள் எதுவும் அருகில் இல்லை; மிகவும் துப்புரவாகக் காட்சி தருகிறது அந்த இடம்.

நமது நாட்டின், குறிப்பாக கலைப் பொக்கிஷங்கள் மிகுந்த தமிழ்நாட்டின் சில ஊர்களை அதனுடன் ஒப்பிடுவதைத் தவிர்ப்பதற்கில்லை. நம் ஊர்களின் கோயில்கள் அல்லது சிற்பங்கள், நமது பாரம்பரிய பெருமை, சிற்பங்களின் பின்னணியில் உள்ள சிறப்பு ஆகியனவற்றை பார்ப்பவர்களின் மனதில் தோற்றுவிக்கிறது என எண்ணினால் தவறு. மாறாக, தங்கப்புதையல் மீது அமர்ந்து, வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுத்த ஒருவன் கதை நினைவுக்கு வருவது தவிர்க்க இயலாதது.

ஒரு சிறப்பு வாய்ந்த கோயிலுக்குள் செல்பவர்கள், அதன் சிறப்பம்சங்கள், அது உருவாக்கப்பட்ட காலகட்டம், அதன் பின்னணி ஆகியன குறித்து சில தகவல்களையாவது பெற்றுத் திரும்ப வேண்டும். நமது கோயில்கள் வழிபாட்டுத் தலங்கள் மட்டுமல்ல, அவை சமுதாயக் கூடங்களாக, பொருளாதார, கலை இலக்கிய வளர்ச்சிக்கான அச்சாக விளங்கின என்ற புரிதலுடன் திரும்ப வேண்டும்.

ராபர்ட் கால்டுவெல், தமிழகம் வந்து சென்னையில் இருந்து வள்ளியூர் நோக்கி நடைப்பயணம் மேற்கொண்டபோது, தஞ்சையை அடைகிறார்; அங்கு, அவருக்கு அவ்வூர் மக்களால் தரப்பட்ட செய்தி, பெரிய கோயில் என்பது 'காடுவெட்டி சோழன்' என்பவரால் கட்டப்பட்டது என்பதாகும்.

அந்த அளவுக்கு அன்றைய மக்கள் அறியாமையில் இருந்திருக்கிறார்கள். இன்றுகூட நிலைமை அதிகம் மாறிவிட்டது என்று கூற முடியாது.

மாமல்லை எனப்படும் மாமல்லபுரத்தின் ஒவ்வொரு கல்லும், ஒவ்வொரு சதுர அடியும் ஒரு கதை சொல்லும். ஆனால், அது ஒரு சுற்றுலாத் தலமாக அல்ல, ஒரு கேளிக்கை தலமாக மாறிவிட்டது என்பது வருத்தத்திற்கு உரியது.

உலகின், மிக அற்புதமான சிற்பங்கள் உடைய மாமல்லபுரத்தின் அருமை, பெருமை தெரியாமல் அதனைக் காதலர் பூங்காவாகவும் - கேளிக்கைத் தலமாகவும் பயன்படுத்துவதைக் காணும்போது வருத்தமே மிஞ்சுகிறது.

மாமல்லையில், சிற்பங்களைச் சுற்றிலும் கறுப்புக் கண்ணாடி - மிட்டாய் - குளிர் பானம் - தின்பண்டம் - தொப்பி-சட்டை, சாவிக்கொத்து என பலவித அங்காடிகள். அநேகமாக சிற்பங்கள் வரையிலும் நெருக்கியடித்துக் கொண்டு விற்கப்படுவதும், பல இடங்களில் மதுக்குடுவைகளும், தண்ணீர் உறைகளும் சிதறிக் கிடப்பதும், கடற்கரை கோயிலுக்குச் செல்லும் வழி மோசமாக இருப்பதும் கோரக் காட்சிகள்.

இவற்றையெல்லாம் மீறி, கூர்ந்து நோக்கும்போது, சிற்பங்களில் வழியும் நேர்த்தி, தென்படும் இயைபு, ஒத்திசைவு, நுண்ணிய உணர்வுகள், கம்பீரம் இவற்றை வடித்த சிற்பிகளின் கற்பனை - பக்தி - ஆழமான அறிவு- திட்டம் - ஒருங்கிணைப்பு- உழைப்பு இவை அனைத்தும் நம்மை வியக்க வைக்கின்றன.

ஆயினும் அவை குறித்து சிந்தனையே இல்லாத பெரும்பாலான பார்வையாளர்கள் உள்ளனர் என்பது மிகுந்த வருத்தம் மட்டுமே தருகிறது. யுனெஸ்கோ கண்களில் பட்ட நமது புராதன சின்னங்கள், நம் அரசின் பார்வையில் பட்டு பாதுகாக்கப்பட வேண்டும். அவை குறித்த புரிதலை மக்கள் பெற வேண்டும்.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய தஞ்சை - மாமல்லை - கங்கை கொண்ட சோழபுரம் மட்டுமல்ல, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட பூம்புகாரின் நிலைமையும் மிகவும் மோசமாக உள்ளது.

நகர நாகரிகங்களில் உன்னதமான இடத்தைப் பிடித்திருந்த பூம்புகார் நகரின் பெருமையை மக்கள் உணர வேண்டும் என்ற நோக்கில் உருவாக்கப்பட்ட, இலஞ்சி மன்றம், பாவை மன்றம், நெடுங்கல் மன்றம் போன்றவை கேட்பாரற்று, பொலிவிழந்து கிடப்பது அவலம்.

இம் மன்றங்கள் குறித்த சிலப்பதிகார பாடல் வரிகளும், அவற்றின் பொருளும் அங்கு காணப்படவில்லை. சிறப்புமிக்க நெடுங்கல்லின் உயரம், சிறப்பு ஆகியன பற்றிய அடிப்படைத் தகவல்கள் இடம்பெறாத, பராமரிப்பற்ற ஒரு வெட்டவெளியாக பூம்புகார் திகழ்கிறது.

சரித்திரமும் இலக்கியமும் பின்னிக் கிடக்கும் இடங்கள் வெறும் கேளிக்கைத் தலங்களாக நம் மக்களால் பார்க்கப்படுவது அறியாமையின் உச்சம். தஞ்சை - கங்கை கொண்ட சோழபுரம் - மாமல்லை - பூம்புகார் போன்ற ஊர்களில், அல்லது அவ்வூர்களில் ஏதேனும் ஒன்றில் மட்டுமேனும் பரிசோதனை முயற்சியில் கவனத்தை அதிகப்படுத்தி செயல்பட்டால், நல்ல பலன் ஏற்படும்.

இந்த இடங்களில் இருந்து சுமார் இருநூறு மீட்டர் தொலைவை வாகனங்கள், சிறு கடைகள் அற்ற இடமாக ஆக்க வேண்டும். மேலும், வாரம் ஒரு முறையேனும், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் இந்த ஊர்களில், ஒரு வழிகாட்டியின் விளக்க உரை ஏற்பாடு செய்யலாம்; ஜிபிஎஸ் தொழில்நுட்ப உதவியுடன் கூடிய பதிவு செய்யப்பட்ட தகவல்களை பயணிகள் கேட்பதற்கு ஏற்பாடு செய்யலாம்.

ஹெட்போன் அணிந்து கொண்டு பயணிகள் காலாற நடந்து சென்று தகவல்களைக் கேட்டு மகிழ உதவலாம். பூம்புகார், தஞ்சை கோவில், மாமல்லைச் சிற்பங்களின் சிறப்பு பற்றிய விவரங்கள் அடங்கிய குறுந்தகடுகள், சிறு கையடக்க நூல்களை விற்பனைக்கு வைக்கலாம். ஒலி-ஒளி காட்சிகள் வாரம் ஒரு முறையேனும் நடத்தலாம்.

இவற்றின் மூலம், பயணிகளுக்கு புரிதல் அதிகரிக்கும், ஓரளவேனும் அறியாமை அகலும், ரசனை பெருகும். நமது நாடு குறித்தும் நம் பாரம்பரியம் குறித்தும் பெருமிதம் அதிகரிக்கும்.

EVA STALIN IAS

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**https://www.evastaliniasacademy.in/**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**

# உலகக் கோப்பை வில்வித்தை: அபிஷேக் வர்மாவுக்கு தங்கம்

**மெடெலின், ஜூன் 18:** கொலம்பியாவில் நடைபெறும் உலகக் கோப்பை வில்வித்தை 3-ஆம் நிலை போட்டியில் இந்தியாவின் அபிஷேக் வர்மா ஞாயிற்றுக்கிழமை தங்கப் பதக்கம் வென்றார்.



அபிஷேக் வர்மா

காம்பவுண்ட் ஆடவர் தனிநபர் பிரிவில் களம் கண்ட அவர், காலிறுதியில் 148-148 (10*-10) என்ற கணக்கில் நெதர்லாந்தின் மைக் ஷ்லோசரை வீழ்த்தினார். பின்னர் அரையிறுதியில் பிரேஸிலின் லூகாஸ் அப்ரியுவை வென்றார். அதன் மூலம் இறுதிச்சுற்றுக்கு வந்த அபிஷேக், அதில் 148-146 என்ற புள்ளிகள் கணக்கில் அமெரிக்காவின் ஜேம்ஸ் லட்ஸை சாய்த்து வாகை சூடினார்.

இத்துடன் இப்போட்டியில் இந்தியா வென்றுள்ள பதக்கங்களின் எண்ணிக்கை 1 தங்கம், 3 வெண்கலம் என 4-ஆக உள்ளது.

உலகக் கோப்பை துப்பாக்கி சுடுதலில் தனிநபர் பிரிவில் அபிஷேக் வென்றுள்ள 3-ஆவது தங்கம் இதுவாகும். இதற்கு முன் 2015 (போலந்து), 2021 (பாரீஸ்) ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டிகளில் அவர் முதலிடம் பிடித்திருக்கிறார். இது தவிர தனிநபர் பிரிவில் அவர் 2 வெள்ளி, 1 வெண்கலமும் வென்றுள்ளார்.

EVA STALIN

# உணவுப் பற்றாக்குறை: 18 நாடுகளுக்கு இந்தியா 18 லட்சம் டன் கோதுமை ஏற்றுமதி

## ஐ.நா. வேளாண் நிதியம் பாராட்டு

**புது தில்லி, ஜூன் 18:** உக்ரைன் போரால் கடந்த ஆண்டு கடும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்ட 18 நாடுகளுக்கு 18 லட்சம் டன் கோதுமையை இந்தியா ஏற்றுமதி செய்திருப்பது பாராட்டுக்குரியது என்று வேளாண் மேம்பாட்டுக்கான ஐ.நா.வின் வேளாண் மேம்பாட்டு சர்வதேச நிதியம் தெரிவித்துள்ளது.

மேலும், சிறுதானியங்கள் பயன்பாட்டுக்கு புத்துயிரூட்ட இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கும் பாராட்டு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜி20 வேளாண் அமைச்சர்கள் மாநாட்டையொட்டி, இந்தியா வந்த ஐ.நா.வின் வேளாண் மேம்பாட்டு சர்வதேச நிதியத்தின் தலைவர் அல்வரோ லாரியோ, பிடிஐ செய்தியாளரிடம் கூறியதாவது:

இந்தியாவின் ஜி20 தலைமை, உலகளாவிய உணவு அமைப்புமுறைகளை மாற்றியமைக்கும் திறன் வாய்ந்ததாகும்.

பயிர்சாகுபடி, அறுவடை, பதப்படுத்துதல், ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு எடுத்துச் செல்லுதல், சந்தைப்படுத்துதல், உணவு நுகர்வு போன்ற அம்சங்கள் உள்ளடங்கிய உணவு அமைப்புமுறையானது, கடந்த சில ஆண்டுகளாக பலவீனத்தை எதிர்கொண்டுள்ளது.

கரோனா பெருந்தொற்று பரவல், உக்ரைன் போர் மற்றும் பருவநிலை மாற்றத்தால் உலகளாவிய உணவுப் பாதுகாப்பு கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஆப்பிரிக்க நாடுகளில் உணவுப் பிரச்னை எழுந்துள்ளது.

உலக அளவில் உணவு மற்றும் எரிபொருள் விலை உயர உக்ரைன் போர் வழிவகுத்தது. இது, ஏழ்மையான நாடுகளில் கடும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் போர் எதிரொலியாக கடந்த ஆண்டு கடும் உணவுப் பற்றாக்குறையை எதிர்கொண்ட 18 நாடுகளுக்கு இந்தியா 18 லட்சம் டன் கோதுமையை ஏற்றுமதி செய்தது பாராட்டுக்குரியதாகும்.

தெற்குலக நாடுகளின் பரஸ்பர ஒத்துழைப்பில் இந்தியா அர்த்தமுள்ள தலைமைத்துவத்தை வெளிப்படுத்தி வருகிறது. தெற்குலகில் வேளாண்மை மற்றும் கிராமப் புற மேம்பாட்டுக்கு இந்தியாவின் நிபுணத்துவம் துணைபுரிய முடியும்.

சிறுதானிய பயிர்கள், பருவநிலை மாற்றத்துக்கு தக்கபடி, வறட்சியை தாங்கி வளரக் கூடியவை. எனவே, இவை விவசாயிகளுக்கு முக்கியமான பயிர்களாகும். அத்துடன், உலகில் ஏழ்மையான மற்றும் தொலைதூர பகுதிகளில் ஊட்டச்சத்து தேவையை சிறுதானியங்கள் மூலம் பூர்த்தி செய்ய முடியும். சிறுதானியங்கள் பயன்பாட்டுக்கு புத்துயிரூட்ட இந்தியா மேற்கொண்டு வரும் முயற்சிகள் பாராட்டத்தக்கவை என்றார் அவர்.

வேளாண் மேம்பாட்டுக்கான சர்வதேச நிதியம், ஐ.நா.வின் சிறப்பு முகமையாகும். இது, வறுமை, பட்டினி மற்றும் உணவு பாதுகாப்பின்மையை எதிர்கொள்வதில், ஏழை நாடுகளுக்கு நிதிரீதியில் உதவுகிறது.

# கோரக்பூர் கீதா பதிப்பகத்துக்கு 'காந்தி அமைதி' விருது

புது தில்லி, ஜூன் 18: உ.பி. மாநிலம் கோரக்பூரில் இயங்கும் இந்தியாவின் முன்னணி பதிப்பகமான கீதா பதிப்பகத்துக்கு 2021-ஆம் ஆண்டின் காந்தி அமைதி விருது வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் 125-ஆவது பிறந்தநாளை முன்னிட்டு அவரது கொள்கைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில் சமூகம், பொருளாதாரம் மற்றும் அரசியல் மாற்றத்துக்காக காந்திய வழிகளில் சிறந்த பங்களிப்பை வழங்கியவர்களுக்கு கடந்த 1995-ஆம் ஆண்டு முதல் மத்திய அரசால் காந்தி அமைதி விருது வழங்கி கௌரவிக்கப்பட்டு வருகிறது.

தேசியம், இனம், மொழி, ஜாதி, மதம் அல்லது பாலினம் ஆகியவற்றைப் பொருட்படுத்தாமல் வழங்கப்படும் காந்தி அமைதி விருதை வென்றவர்களுக்கு ரூ.1 கோடி, பாராட்டுச் சான்றிதழ், நேர்த்தியான பாரம்பரிய கைவினைப் பொருள்/கைத்தறிப் பொருள் ஆகியவை வழங்கப்படும்.

2021-ஆம் ஆண்டு காந்தி அமைதி விருதுகுறித்து மத்திய கலாசாரத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், '2021-ஆம் ஆண்டு காந்தி அமைதி விருதுக்கு கோரக்பூரில் இயங்கி வரும் கீதா பதிப்பகத்தை பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான தேர்வுக் குழு ஒருமனதாக தேர்வு செய்துள்ளது.

காந்திய கொள்கைகளான அமைதி மற்றும் சமூக நல்லிணக்கத்தை மேம்படுத்துவதில் கீதா பதிப்பகத்தின் பங்களிப்பை நினைவு கூர்ந்த பிரதமர் மோடி, 'கீதா பதிப்பகம் தொடங்கிய நூற்றாண்டில் காந்தி அமைதி விருது வழங்கப்படுவது, சமூக சேவையில் அந்நிறுவனம் ஆற்றி வரும் பணிகளுக்கான அங்கீகாரம்' என்றார்.

மனித இனத்தின் ஒட்டுமொத்த கூட்டு மேம்பாட்டுக்காக கீதா பதிப்பகத்தின் முக்கியமான மற்றும் இணையற்ற பங்களிப்பை காந்தி அமைதி விருது அங்கீகரிக்கிறது.

கடந்த 1923-ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட கீதா பதிப்பகம், 16.21 கோடி பகவத்கீதை புத்தகங்கள் உள்பட 14 மொழிகளில் 41.7 கோடி புத்தகங்களை மலிவு விலையில் வெளியிட்டுள்ளது.

உலகின் மிகப்பெரிய பதிப்பகங்களில் கீதா பதிப்பகமும் ஒன்றாகும்' எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நடப்பாண்டுக்குள் 6 உச்சநீதிமன்ற நீதிபதிகள் ஓய்வு

புது தில்லி, ஜூன் 18: நடப்பாண்டு இறுதிக்குள் உச்சநீதிமன்றத்தின் 6 நீதிபதிகள் பணிஓய்வு பெறவுள்ளனர்.

அதன் காரணமாக, நீதிபதிகளை நியமிப்பதற்கான கொலீஜியம் குழுவில் பெரும் மாற்றங்கள் ஏற்படவுள்ளன.

உச்ச நீதிமன்றத்தின் அனுமதிக்கப்பட்ட நீதிபதிகளின் எண்ணிக்கை 34-ஆக உள்ளது. நீதிபதிகள் கே.எம்.ஜோசஃப், அஜய் ரஸ்தோகி ஆகியோர் சனிக்கிழமையுடன் (ஜூன் 17) ஓய்வுபெற்றார். நீதிபதி வெ.ராமசுப்பிரமணியன் வரும் 29-ஆம் தேதியுடன் ஓய்வுபெற உள்ளார்.

அவர்கள் மூவரும் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் தலைமையிலான கொலீஜியத்தில் இடம் பெற்றிருந்தனர். அவர்களது பணிஓய்வு காரணமாக, நடப்பு மாத இறுதிக்குள் கொலீஜியத்தில் 3 புதிய நீதிபதிகள் இடம் பெறவுள்ளனர்.

## பெரும் மாற்றங்களை எதிர்கொள்ளவிருக்கும் கொலீஜியம்

இது நீதிபதிகளின் நியமனத்திலும் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கொலீஜியத்தில் ஏற்கெனவே உள்ள தலைமை நீதிபதி சந்திரசூட், நீதிபதி எஸ்.கே.கௌல் ஆகியோருடன் நீதிபதிகள் சஞ்சீவ் கன்னா, பி.ஆர்.கவாய், சூர்யகாந்த் ஆகியோர் புதிதாக இடம்பெறவுள்ளனர்.

நடப்பாண்டு இறுதிக்குள் மேலும் 3 உச்சநீதிமன்ற நீதிபதிகள் பணிஓய்வு பெறவுள்ளனர்.



நீதிபதி கிருஷ்ண முராரி ஜூலை 8-ஆம் தேதியும், நீதிபதி எஸ். ரவீந்திர பட் அக்டோபர் 20-ஆம் தேதியும் நீதிபதி எஸ். கே.கௌல் டிசம்பர் 25-ஆம் தேதியும் பணிஓய்வு பெறவுள்ளார்.

அதன் காரணமாகவும் கொலீஜியத்தில் மாற்றங்கள் ஏற்படவுள்ளன. உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக டி.ஒய்.சந்திரசூட் கடந்த ஆண்டு நவம்பர் 11-ஆம் தேதி பொறுப்பேற்றுக் கொண்டார். அப்போதுமுதல் இதுவரை 10 புதிய உச்ச நீதிமன்ற நீதிபதிகளுக்கு கொலீஜியம் ஒப்புதல் அளித்துள்ளது.

நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, பங்கஜ் மித்தல், சஞ்சய் கரோல், சஞ்சய் குமார், அசானுதீன் அமானுல்லா, மனோஜ் மிஸ்ரா, ராஜேஷ் பிந்தல், அரவிந்த் குமார், பிரசாந்த் கே.மிஸ்ரா, கே.வி.விஸ்வநாதன் ஆகியோர் தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான கொலீஜியத்தால் பரிந்துரைக்கப்பட்டு நீதிபதிகளாக நியமனம் செய்யப்பட்டவர்கள் ஆவர்.

நீதித்துறையில் பெண்களின் பங்களிப்பு அதிகரிக்க வேண்டும் எனத் தலைமை நீதிபதி சந்திரசூட் பல்வேறு நிகழ்ச்சிகளில் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார். ஆனால், அவரது தலைமையில் செயல்பட்டு வரும் கொலீஜியம், உச்ச நீதிமன்றத்துக்கு இதுவரை 10 பேரை நீதிபதிகளாகப் நியமிக்க பரிந்துரை செய்துள்ளபோதிலும், அவர்களில் ஒரு பெண் கூட இடம்பெறாதது பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

தற்போதைய சூழலில் உச்ச நீதிமன்றத்தில் 3 பெண்கள் மட்டுமே நீதிபதிகளாக உள்ளனர். நீதிபதிகள் ஹிமா கோலி, பி.வி.நாகரத்னா, பெலா எம்.திரிவேதி ஆகியோரே அவர்கள்.

அவர்களில் நீதிபதி பி.வி.நாகரத்னா 2027-ஆம் ஆண்டில் உச்ச நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக வாய்ப்புள்ளது. அவ்வாறான சூழலில், உச்ச நீதிமன்றத்தின் முதல் பெண் தலைமைநீதிபதி என்றபெருமையை அவர் பெறுவார்.

எனினும், வெறும் 36 நாள்களுக்கு மட்டுமே தலைமை நீதிபதியாக அவர் பணியில் நீடிப்பார். 2027-ஆம் ஆண்டு செப்டம்பர் 24-ஆம் தேதி தலைமை நீதிபதியாகப் பொறுப்பேற்க வாய்ப்புள்ள நாகரத்னா, அக்டோபர் 29-ஆம் தேதி பணிஓய்வு பெறுவார்.

நடப்பாண்டுக்குள் 6 உச்ச நீதிமன்ற நீதிபதிகள் ஓய்வுபெறவுள்ளனர். அடுத்த ஆண்டில் நீதிபதிகள் அனிருத்தா போஸ், ஏ.எஸ்.போபண்ணா, ஹிமா கோலி ஆகிய மூவரும் பணிஓய்வு பெறுவர்.

எனவே, மொத்தமாக 9 புதிய நீதிபதிகளை நியமிக்க வேண்டிய பொறுப்பு தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையிலான கொலீஜியத்துக்கு உள்ளது.

| நடப்பாண்டில் ஓய்வு பெற்ற / பெறவுள்ள நீதிபதிகள் | |
|---|---|
| நீதிபதி **கே.எம்.ஜோசஃப்** | ஜூன் 17 |
| நீதிபதி **அஜய் ரஸ்தோகி** | ஜூன் 17 |
| நீதிபதி **வெ.ராமசுப்பிரமணியன்** | ஜூன் 29 |
| நீதிபதி **கிருஷ்ண முராரி** | ஜூலை 8 |
| நீதிபதி **எஸ்.ரவீந்திர பட்** | அக்டோபர் 20 |
| நீதிபதி **எஸ்.கே.கௌல்** | டிசம்பர் 25 |
| **அடுத்த ஆண்டில் ஓய்வு பெறவுள்ள நீதிபதிகள்** | |
| நீதிபதி **அனிருத்தா போஸ்** | ஏப்ரல் 10 |
| நீதிபதி **ஏ.எஸ்.போபண்ணா** | மே 19 |
| நீதிபதி **ஹிமா கோலி** | செப்டம்பர் 1 |

ஏற்கெனவே 10 நீதிபதிகளை அவரது தலைமையிலான கொலீஜியம் பரிந்துரைத்துள்ள நிலையில், எதிர்வரும் காலங்களில் பரிந்துரைக்கப்படவுள்ள 9 நீதிபதிகளில் எத்தனை பேர் பெண்களாக இருப்பர் என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

மூத்த நீதிபதிகளின் பணிஓய்வால் மாற்றங்களை எதிர்கொள்ளவிருக்கும் கொலீஜியம், பெண் நீதிபதிகளைப் பரிந்துரைப்பதற்கு முக்கியத்துவமும் முன்னுரிமையும் வழங்கும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது.

epaper.dinamani.com

INDONESIA OPEN 2023

## வரலாறு படைத்தது

# சாத்விக்/சிராக் இணை



வெற்றி உற்சாகத்தில் சிராக் ஷெட்டியை தூக்கிக் கொண்டாடும் சாத்விக்சாய்ராஜ்.

ஜகார்த்தா, ஜூன் 18: இந்தோனேசிய ஓபன் பாட்மின்டன் போட்டியில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் சாத்விக்சாய்ராஜ்/சிராக் ஷெட்டி கூட்டணி சாம்பியன் பட்டம் வென்று ஞாயிற்றுக்கிழமை வரலாறு படைத்தது. 'சூப்பர் 1000' போட்டிகளில் தங்கப் பதக்கம் வென்ற முதல் இந்திய ஜோடி என்ற பெருமையை அவர்கள் இருவரும் பெற்றுள்ளனர்.

போட்டித்தரவரிசையில் 7-ஆம் இடத்திலிருந்த சாத்விக்/சிராக் கூட்டணி இறுதி ஆட்டத்தில், 21-17, 21-18 என்ற கேம்களில், மலேசிய உலக சாம்பியன் இணையும், போட்டித்தரவரிசையில் 2-ஆம் இடத்திலும் இருந்த ஜோடியுமான ஆரோன் சியா/சோ வூய் யிக் ஜோடியை 43 நிமிஷங்களில் சாய்த்தனர். இத்துடன், 11 முறை ஆரோன்/சோ இணையை சந்தித்துள்ள நிலையில், சாத்விக்/சிராக் கூட்டணி தனது முதல் வெற்றியை பதிவு செய்திருப்பதும் குறிப்பிடத்தக்கது.

சாம்பியன் ஆன சாத்விக்/சிராக் இணைக்கு வெற்றிக் கோப்பை, தங்கப் பதக்கம், மொத்தமாக ரூ.75.77 லட்சம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டுள்ளது.

இத்துடன், காமன்வெல்த் விளையாட்டுப் போட்டி (தங்கம்), தாமஸ் கோப்பை போட்டி (தங்கம்), உலக சாம்பியன்ஷிப் (வெண்கலம்), சையது மோடி பாட்மின்டன் போட்டி (தங்கம்), தாய்லாந்து ஓபன் (தங்கம்), இந்தியா ஓபன் (தங்கம்), பிரெஞ்சு ஓபன் (தங்கம்) ஆகிய பதக்கங்களுடன் தற்போது இந்தோனேசிய பட்டத்தையும் தனது பட்டியலில் சேர்த்துக் கொண்டது இந்திய இணை.



விக்டர் அக்ஸெல்சென் | சென் யு ஃபெய் | பேக் ஹா னா/லீ சோ ஹீ | ஜெங் சி வெய்/ஹுவாங் யா கியாங்

### இதர வெற்றியாளர்கள்

இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவில், டென்மார்க்கின் விக்டர் அக்ஸெல்சென் – இந்தோனேசியாவின் அந்தோணி சினிசுகாவை சாய்த்து சாம்பியன் ஆனார்.

மகளிர் ஒற்றையரில் சீனாவின் சென் யு ஃபெய் – ஸ்பெயினின் கரோலினா மரினை வீழ்த்தி வாகை சூடினார். மகளிர் இரட்டையரில் தென் கொரியாவின் பேக் ஹா னா/லீ சோ ஹீ இணை – ஜப்பானின் யுகி ஃபுகுஷிமா/சயாகா ஹிரோடா ஜோடியை சாய்த்து தங்கம் வென்றது. கலப்பு இரட்டையரில் சீனாவின் ஜெங் சி வெய்/ஹுவாங் யா கியாங் இணை – ஜப்பானின் யுடா வடானபே/அரிசா ஹிகாசினோ ஜோடியை சாய்த்து கோப்பை வென்றது.

### முதல் முறை...

இந்தோனேசிய ஓபன் பாட்மின்டன் போட்டியில் இதற்கு முன் சாய்னா நெவால் (2010, 2012), கே.ஸ்ரீகாந்த் (2017) ஆகியோர் ஒற்றையர் பிரிவில் சாம்பியனாகியிருந்த நிலையில், முதல் முறையாக இந்தப் போட்டியில் சாம்பியனான இந்திய இணை என்ற பெருமையை சாத்விக்/சிராக் பெற்றுள்ளனர்.

மேலும், உலக பாட்மின்டன் சம்மேளனத்தின் 6 உலக டூர் போட்டிகளில், இத்துடன் 'எஸ்100', 'எஸ்300', 'எஸ்500', 'எஸ்750', 'எஸ்1000' என 5-இல் சாம்பியன் ஆன முதல் இந்திய இரட்டையர் என்ற சாதனையையும் சாத்விக்/சிராக் இணை எட்டியிருக்கிறது.

**EVA STALIN IAS ACADEMY - BEST IAS COACHING IN CHENNAI**
**12/24, Muthurangan Muthali St, West Tambaram, Chennai - 600045**
**[https://www.evastaliniasacademy.in/](https://www.evastaliniasacademy.in/)**
**Contact Number - +91-8678969915, +91-9940332851**